# 2018–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24–ஆம் தேதி (24.08.2018) வெள்ளிக் கிழமை காலை 10.15 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

1. அரசாணை (எம்.எஸ்) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள். 19.07.2018 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள். 26.07.2018–ல் 01.04.2018 முதல் புதிய சொத்துவரி சீராய்வு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 20.08.2018 மற்றும் 21.08.2018–ம் தேதிய சுற்றறிக்கை, கடிதம் ந.க.எண். 20555/2018/ஆர்1–ல் பொது சொத்துவரி சீராய்வு தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் குறித்த வழிகாட்டுதல்கள் (Guidelines) மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :–

பதிவு செய்யலாம்.

கோப்பு எண். அ1/3833/2018

**106. பதிவுசெய்யப்பட்டது.**

2. அரசாணை (நிலை) எண்.390 நிதி (ஊதியப்பிரிவு) துறை நாள்.07.11.2012ல் 25 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்த அரசு பணியாளர்களுக்கு ரூ.2000/– ரொக்கப்பரிசும், சான்றிதழும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

அரசு துணை செயலர் நிதி (ஊதியப்பிரிவு) துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9562/ஊபி/2015–1 நாள்.03.03.2015 மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) உள்ளாட்சி நிதித்தணிக்கை குறளகம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14892/ந.க.2/2015 நாள்.29.05.2015ல் மேற்படி அரசாணையினை மாநகராட்சிகளில் நடைமுறைப்படுத்த சம்மந்தப்பட்ட மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ஈரோடு மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களில் 25 வருடம் மாசற்ற முறையில் பணிபுரிந்தவர்களுக்கு மேற்படி அரசாணையினை நடைமுறைப்படுத்தி ரொக்கத்தொகை ரூ.2000/– வீதம் மற்றும் சான்றிதழ் வழங்கவும் மேற்படி செலவினத்தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றுத் தொகை வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.சி1/ 4032 /2018.

**107. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

3. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி. ரோடு தினசரி அங்காடியின் வணிக வளாக தரைத் தளக் கடை எண்கள் 23, 38, 55, 56 மற்றும் 90 ஆகியவற்றின் உரிமதாரர்கள் மேற்படி

கடைகளை பொது ஏலத்தின் மூலம் கடும் போட்டியில் எடுத்து நடத்தி வந்ததாகவும், தற்போது வியாபார சூழ்நிலையின் காரணமாக மேற்கொண்டு கடைக்கு வாடகை செலுத்தி தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | ஆர்.கே.வி. ரோடு தினசரி அங்காடியின் வணிக வளாக தரைத் தளக் கடை எண். 23 | திருமதி. சின்னபொண்ணு |
| 2. | ஆர்.கே.வி. ரோடு தினசரி அங்காடியின் வணிக வளாக தரைத் தளக் கடை எண். 38 | திரு. சையது முஸ்தபா |
| 3. | ஆர்.கே.வி. ரோடு தினசரி அங்காடியின் வணிக வளாக தரைத் தளக் கடை எண். 55 | திரு. எம். வெங்கடேஷ் பிரபு |
| 4. | ஆர்.கே.வி. ரோடு தினசரி அங்காடியின் வணிக வளாக தரைத் தளக் கடை எண். 56 | திரு. எல். ராமமூர்த்தி |
| 5. | ஆர்.கே.வி. ரோடு தினசரி அங்காடியின் வணிக வளாக தரைத் தளக் கடை எண். 90 | திரு. பி. கணேசன் |

ஆகவே மேற்படி கடைகளின் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அவசர அவசியத்தை முன்னிட்டு உடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி கடையினை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/11205/2006

**108. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

4. ஈரோடு மாநகராட்சியில் பணிபுரிந்து வந்த திரு.சி.செல்வராஜ், வரிவசூலர் (தற்காலிக பணிநீக்கம்) என்பவர், தற்காலிக பணிநீக்கத்தை இரத்து செய்து மீண்டும் பணிவழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண். W.P.No.2264/2015-ற்கு, 03.08.2017–ம் தேதியில் தீர்ப்புரை பெறப்பட்டுள்ளது. வரப்பெற்ற தீர்ப்புரைக்கு இம்மாநகராட்சி சார்பாக மேல்முறையீட்டு வழக்கு எண். W.A.No.846/2018-ல் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் திரு.எஸ்.டி.எஸ்.மூர்த்தி, முதன்மை வழக்கறிஞர், அரசு கூடுதல் அட்வகேட் ஜெனரல் ஆப் தமிழ்நாடு–V, சென்னை உயர்நீதிமன்றம் அவர்கள் 18.04.2018 மற்றும் 11.07.2018 ஆகிய தேதிகளில் ஆஜராகி வழக்கினை நடத்தியமைக்கான கட்டணம் ரூ.60,000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) வழங்குமாறு கடிதம் எண்.S.B.F.B.No.16/2018, நாள்.12.07.2018–ல் கோரியுள்ளார்.

மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் திரு.எஸ்.டி.எஸ்.மூர்த்தி, முதன்மை வழக்கறிஞர், அரசு கூடுதல் அட்வகேட் ஜெனரல் ஆப் தமிழ்நாடு–V, சென்னை உயர்நீதிமன்றம் அவர்கள் மாநகராட்சி சார்பாக 18.04.2018 மற்றும் 11.07.2018 ஆகிய தேதிகளில் ஆஜராகி வழக்கினை நடத்தி வெற்றிபெறச் செய்தார் எனவும், அதற்குரிய வழக்கு கட்டணம் ரூ.60,000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) வழங்கலாம் எனவும் மாநகராட்சி வழக்கறிஞர் திரு.எம்.ராஜாமதிவாணன், சென்னை உயர்நீதிமன்றம் அவர்கள் தெளிவுரை வழங்கியுள்ளதன்பேரில் தொகை வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

திரு.எஸ்.டி.எஸ்.மூர்த்தி, முதன்மை வழக்கறிஞர், அரசு கூடுதல் அட்வகேட் ஜெனரல் ஆப் தமிழ்நாடு–V, சென்னை உயர்நீதிமன்றம் அவர்கள் மாநகராட்சி சார்பாக 18.04.2018 மற்றும் 11.07.2018 ஆகிய தேதிகளில் ஆஜராகி வழக்கினை நடத்தியமைக்கு முன் அனுமதி பெற்று தொகை வழங்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(சி1/4332/2012)

**109. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**5.** ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள் உள்ள சிறுதொழில் கட்டிங் வேஸ்ட் சலவைப்பட்டறை உரிமையாளர்கள் சங்கத்தின் கடிதம், நாள்: **06.06.2018**–ல் பிளீச்சிங் பட்டறைகளுக்கு உரிமம் வழங்க ஆவன செய்யும்படி கோரப்பட்டுள்ளது. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–**1** துப்புரவு அலுவலரின் அறிக்கையில் ஈரோடு மாநகராட்சி சட்டம் **2008** அட்டவணை IV-ல் பிளீச்சிங் (BLEACHING) பட்டறை தொழில் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும், மாநகராட்சியின் நான்கு மண்டலங்களிலும் பிளீச்சிங் பட்டறை தொழில் நடைபெற்று வருகிறது எனவும் ஆகவே, மாநகராட்சியின் நிதி ஆதாரத்தை பெருக்கும் நோக்கில், துணிகளில் நிறம் நீக்குதல் **(**BLEACHING OF CLOTH) என்ற தொழிலுக்கு ரூ.**1000/–** தொழில் உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்து மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று அறிவிக்கை வெளியிட நடவடிக்கை எடுக்குமாறும் கூறப்பட்டுள்ளது.

தொழில் உரிமக் கட்டணங்கள் தொடர்பாக மாநகராட்சி மைய அலுவலகத்தில் **25.07.2018–**ந் தேதியன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்ட அறிக்கையில், மேற்படி பிளீச்சிங் பட்டறை தொழில்களுக்கு ரூ.**2000/=** ஆக தொழில் உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யலாம் எனவும் மேலும் மின்மோட்டார்கள் பயன்பாட்டுக்கு உரிமம் வழங்கும் முன் அவற்றுக்கு பொறியர் பிரிவில் Installation Charges வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சி சட்டம் **2008** பிரிவு **360** வ.எண் **5** மற்றும் **6**–ல் உள்ள ஷரத்துக்கள் யாவும் துணிகளுக்கு சாயம் போடுதல், பிரிண்டிங் செய்தல் போன்றவையாகும். பிளீச்சிங் செய்யும் தொழிலும் அதில் ஒரு பகுதியே ஆகும்.

ஆகையால் ஏற்கனவே வெளியிடப்பட்ட **(**ந.க.எண்**1554/2016/**எச்**2,** நாள்**:07.11.2016)** அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் தொடர்ச்சியாக ஈரோடு மாநகராட்சி சட்டம் **2008** பிரிவு **360** வ.எண் **6**ல், உட்பிரிவை ஏற்படுத்தி பிளீச்சிங் பட்டறை தொழில்களுக்கு தொழில் உரிமக் கட்டணம் ரூ.**2000/–** என நிர்ணயம் செய்து தனி அலுவலர் அவர்களின் (மாமன்ற) ஒப்புதல் பெற்று வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : –

ஏற்கனவே வெளியிடப்பட்ட **(**ந.க.எண்**1554/2016/**எச்**2,**நாள்**:07.11.2016)** அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் தொடர்ச்சியாக ஈரோடு மாநகராட்சி சட்டம் **2008** பிரிவு **360** வ.எண் **5** மற்றும் **6**–ல், உட்பிரிவை ஏற்படுத்தி பிளீச்சிங் பட்டறை தொழில்களுக்கு தொழில் உரிமக் கட்டணம் ரூ.**2000/–** என நிர்ணயம் செய்து வசூல் செய்ய அனுமதி வழங்கலாம்.

(எச்2/1554/2016)

**110. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

6. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட சம்பத் நகர் சாலை வணிக வளாக கடை எண்கள் 1, 2 மற்றும் 3 ஆகிய கடைகளுக்கு பின்புறம் உள்ள 1958 சதுர அடி காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 01.08.2018 முதல் 31.03.2021 முடிய மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 31.07.2018 அன்று நடைபெற்றது. மேற்படி நாளன்று ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு உச்ச கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் திரு. /திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | சம்பத் நகர் சாலை வணிக வளாக கடை எண்கள் 1, 2 மற்றும் 3 ஆகிய கடைகளுக்கு பின்புறம் உள்ள 1958 சதுர அடி காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | D. விஜயகுமார் | 5000- | **எம். பிரவீன்** | **6000-** |

மேற்படி ஏல இனத்திற்கு திரு.எம்.பிரவீன் என்பவர் ரூ.6000-க்கு ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளார்.

மேற்படி சம்பத் நகர் சாலை வணிக வளாக கடை எண்கள் 1, 2 மற்றும் 3 ஆகிய கடைகளுக்கு பின்புறம் உள்ள 1958 சதுர அடி காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.எம்.பிரவீன் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்படி ஏல இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியுள்ள திரு.எம்.பிரவீன் என்பவருக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.08.2018 முதல் 31.03.2021 முடிய மூன்றாண்டுகளுக்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/160/2016

**111. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

7. இம்மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி.சாலையில் தினசரி அங்காடியில் பழைய மார்க்கெட் வணிக வளாக தரைத்தளக் கடை எண்கள் **23, 38, 55, 56** மற்றும் **90** ஆகியவைகளை ஒப்படைக்கும் தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி **14.08.2018** அன்று நடைபெற்றது. மேற்படி ஏல நாளன்று ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள ஒரு கடைக்கு இரண்டு நபர்கள் வீதம் வைப்புத் தொகை

செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எ ண். | கடை எண் | கடையின் அளவு | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஏலதாரர் பெயர் திரு. / திருமதி. | ஒப்பந்தப்–புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் திரு. / திருமதி. | ஒப்பந்தப்–புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | 23 | 6’x6’ அடி | **ஆர். பாலாஜி** | **2460-** | பி. நந்தினி | 2000- |
| 2. | 38 | 6’x6’ அடி | எம். சாராமா | 2000- | **இ. ஆசாத்** | **2500-** |
| 3. | 55 | 6’x6’ அடி | ஈஸ்வரி | 1950- | **மாதேஸ்வரன்** | **2450-** |
| 4. | 56 | 6’x6’ அடி | ஆர். காமாட்சி | 1900- | **எம். ரவிபிள்ளை** | **2500-** |
| 5. | 90 | 6’x6’ அடி | **ஜி. வானிஸ்வரி** | **2500-** | ஏ. அப்துல்கலாம் | 2000- |

மேற்படி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் 6’x6’ அடி அளவுள்ள கடைக்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வியாக ரூ.2400–க்கு மேல் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்டுள்ள 6’x6’ அடி அளவுள்ள கடை எண்கள். 23, 38, 55, 56 மற்றும் 90 ஆகியவற்றுக்கு ரூ.2400–க்கு மேல் ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி கடைகளுக்கு உச்ச ஏலக் கேள்வித் தொகை கோரியவர்களுக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.09.2018 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(அ1/11205/2009)

**112. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

8. ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான நேதாஜி புதிய வணிக வளாக கடை எண்கள். 3, 4, 5, 6, 14, 7, 12, 22, 54, 9, 41, 10, 11, 13, 21, 28, 29, 20 40, 43, 30, 31, 51, 52, 53, 63, 36, 47, 39, 42, 44, 49, 56, 59, 57, 58, 60, 61 மற்றும் 15 ஆகியவற்றின் ஏலதாரர்கள் வியாபார சூழ்நிலை காரணமாக தொடர்ந்து கடையினை நடத்த இயலாமல் இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்து விட்டதாகவும், மேற்படி கடைகளுக்காக செலுத்திய வைப்புத் தொகையினை திருப்பி வழங்குமாறு கோரியுள்ளார்கள். விவரம் பின்வருமாறு

| வ. எ ண் | கடை எண். | ஏலதாரர் பெயர் | காலங்கடந்த வைப்புத் தொகைப் பதிவேடு தொகுப்பு | வருடம் | ப. எண். | தொகை. | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 3 | ஜி. செந்தில்குமார் | RF-4018 Vol-III | 2011-2012 | 50 | 168800- | 273800- |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 50 | 5000- | |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 48 | 6000- | |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 48 | 45000- | |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 48 | 49000- | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2. | 4 | ஏ. ஜெயப்பிரகாஷ் | RF-4018 Vol-III | 2011-2012 | 50 | 163000- | 263000- |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 49 | 100000- | |
| 3. | 5<br>6<br>14 | டி. முத்துகிருஷ்ணன் | RF-4018 Vol-III | 2011-2012 | 47 | 100000- | 422464- |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 47 | 100000- | |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 47 | 100000- | |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 57 | 52024- | |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 61 | 55440- | |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 61 | 5000- | |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 61 | 10000- | |
| 4. | 7<br>12<br>22<br>54 | பி. மீனாட்சி | RF-4018 Vol-III | 2011-2012 | 51 | 100000- | 471048- |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 52 | 100000- | |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 54 | 56808- | |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 54 | 64040- | |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 65 | 45200- | |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 65 | 5000- | |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 56 | 100000- | |
| 5. | 9<br>41 | ஆர். ராஜகுமார் | RF-4018 Vol-III | 2011-2012 | 52 | 100000- | 283400- |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 55 | 183400- | |
| 6. | 10 | சி. துரைசாமி | RF-4018 Vol-III | 2012-2013 | 60 | 87200- | 192200- |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 60 | 5000- | |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 52 | 100000- | |
| 7. | 11 | எஸ். சுந்தரேஷன் | RF-4018 Vol-III | 2009-2010 | 12 | 20000- | 381000- |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 33 | 89000- | |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 33 | 89000- | |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 33 | 89000- | |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 33 | 89000- | |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 33 | 5000- | |
| 8. | 13 | கே. முனிராஜ் | RF-4018 Vol-III | 2012-2013 | 53 | 196600- | 296600- |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 47 | 100000- | |
| 9. | 21 | ஏ. மணி | RF-4018 Vol-III | 2009-2010 | 14 | 38888- | 202488- |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 14 | 50000- | |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 24 | 56800- | |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 24 | 56800- | |
| 10. | 28 | எஸ். ஜெயகுமார் | RF-4018 Vol-III | 2011-2012 | 49 | 100000- | 137000- |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 50 | 32000- | |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 50 | 5000- | |
| 11. | 29 | அ. செந்திவேல் | RF-4018 Vol-III | 2011-2012 | 49 | 100000- | 197000- |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 50 | 92000- | |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 50 | 5000- | |
| 12. | 20 | பி. விஷ்ணுவர்தன் | RF-4018 Vol-III | 2012-2013 | 75 | 2832- | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 40 | | RF-4018 Vol-III | 2012-2013 | 75 | 100000- | |
| | 43 | | RF-4018 Vol-III | 2012-2013 | 75 | 100000- | |
| | 31 | | RF-4018 Vol-III | 2010-2011 | 29 | 9976- | |
| | 51 | | RF-4018 Vol-III | 2010-2011 | 29 | 5000- | 413112- |
| | 52 | | RF-4018 Vol-III | 2010-2011 | 29 | 91000- | |
| | 53 | | RF-4018 Vol-III | 2010-2011 | 30 | 5800- | |
| | 63 | | RF-4018 Vol-III | 2010-2011 | 30 | 5000- | |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 65 | 3304- | |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 65 | 5000- | |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 51 | 85200- | |
| 13. | 30 | கே. முகேஷ் | RF-4018 Vol-III | 2009-2010 | 15 | 50000- | |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 15 | 50000- | 208800- |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 24 | 54400- | |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 24 | 54400- | |
| 14. | 36 | என்.எஸ். மோகன்குமார் | RF-4018 Vol-III | 2010-2011 | 23 | 82000- | |
| | 47 | | RF-4018 Vol-III | 2010-2011 | 23 | 82000- | 269400- |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 15 | 100000- | |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 32 | 5400- | |
| 15. | 39 | ஜி.ஆர். லட்சுமி நாராயணன் | RF-4018 Vol-III | 2010-2011 | 23 | 70000- | |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 23 | 70000- | |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 30 | 5000- | 245000- |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 16 | 45000- | |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 16 | 35000- | |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 16 | 20000- | |
| 16. | 42 | ஏ. பூபதி | RF-4018 Vol-III | 2011-2012 | 51 | 100000- | 183800- |
| | | | RF-4018 Vol-III | 2012-2013 | 59 | 83800- | |
| 17. | 44 | எஸ்.ஏ. திருமுர்த்தி | RF-4018 Vol-III | 2009-2010 | 16 | 100000- | |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 29 | 92800- | 266800- |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 29 | 69000- | |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 29 | 5000- | |
| 18. | 49 | ஜெ. சவுமியா ஜவஹர் | RF-4018 Vol-III | 2012-2013 | 75 | 100000- | 100000- |
| 19. | 56 | பி. மோகன் | RF-4018 Vol-III | 2010-2011 | 22 | 2088- | |
| | 59 | | RF-4018 Vol-III | 2009-2010 | 17 | 100000- | 161528 |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 25 | 22400- | |
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 31 | 37040- | |
| 20. | 57 | எம். நளினி | RF-4018 Vol-III | 2010-2011 | 24 | 65600- | 165600- |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 13 | 100000- | |
| 21. | 58 | சஜிலி சாம் | RF-4018 Vol-III | 2010-2011 | 25 | 51200- | 151200- |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 13 | 100000- | |
| 22. | 60 | எஸ்.ஜெ. பிரதர்ஸ் | RF-4018 Vol-III | 2010-2011 | 28 | 20240- | 25240- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | RF-4018 Vol-III | 2010-2011 | 28 | 5000- | |
| 23. | 61 | எம். அன்பழகன் | RF-4018 Vol-III | 2011-2012 | 48 | 35206- | 135206- |
| | | | RF-4018 Vol-III | 2009-2010 | 17 | 100000- | |
| 24. | 15 | இ. சம்பத்குமார் | RF-4018 Vol-III | 2011-2012 | 52 | 100000- | 200000- |
| | | | RF-4018 Vol-III | 2011-2012 | 52 | 100000- | |
| | | | | கூடுதல் | | | **5645686-** |

மேற்கண்ட ஏல வைப்புத் தொகை ரூ.56,45,686-ஐ காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், வ.எண். 1 முதல் 24 வரை உள்ள ஏலதாரர்களுக்கு திரும்ப வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

காலங்கடந்த வைப்புக் கணக்கிலுள்ள வருவாய் நிதி ஏலவைப்புத் தொகை ரூ.56,45,686-ஐ மேற்கண்ட வ.எண். 1 முதல் 24 வரை உள்ள ஏலதாரர்களுக்கு திருப்பி வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**113. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

9. ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான ஆர்.கே.வி. ரோடு லூம் வேல்டு முதல் தளக் கடை எண்கள். 8, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31 மற்றும் 32 ஆகியவற்றின் ஏலதாரர்கள் மேற்படி கடைகளுக்கு கண்காணிப்பு குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை அதிகமாக உள்ளதால் தொடர்ந்து கடையினை நடத்த இயலாமல் இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்து விட்டதாகவும், மேற்படி கடைகளுக்காக செலுத்திய வைப்புத் தொகையினை திருப்பி வழங்குமாறு கோரியுள்ளார்கள். விவரம் பின்வருமாறு

| வ. எண். | கடை எண். | ஏலதாரர் பெயர் | காலங்கடந்த வைப்புத் தொகைப் பதிவேடு தொகுப்பு | வருடம் | ப. எண். | தொகை. |
|---|---|---|---|---|---|---|
| 1. | 26 | கே. மதியழகன் | RF-4018 Vol-II | 2007-2008 | 71 | 20000- |
| | 27 | | | | 71 | 20000- |
| | 28 | | | | 71 | 20000- |
| | 29 | | | | 71 | 20000- |
| | 30 | | | | 71 | 20000- |
| | 31 | | | | 71 | 20000- |
| | 32 | | | | 71 | 20000- |
| | 8 | | | | 72 | 20000- |
| | 14 | | | | 73 | 20000- |
| | 15 | | | | 73 | 20000- |
| | 16 | | | | 73 | 20000- |
| | 17 | | | | 73 | 20000- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 18 | | | | 73 | 20000- |
| | 19 | | | | 74 | 20000- |
| | 20 | | | | 74 | 20000- |
| | 21 | | | | 74 | 20000- |
| | 22 | | | | 74 | 20000- |
| | 23 | | | | 74 | 20000- |
| | 24 | | | | 74 | 20000- |
| | 25 | | | | 75 | 20000- |
| | | | | கூடுதல் | | **400000-** |

மேற்கண்ட ஏல வைப்புத் தொகை ரூ.4,00,000-ஐ காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், திரு.கே.மதியழகன் என்பவருக்கு திரும்ப வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

காலங்கடந்த வைப்புக் கணக்கிலுள்ள வருவாய் நிதி ஏல வைப்புத் தொகை ரூ.4,00,000-ஐ திரு.கே.மதியழகன் என்பவருக்கு திருப்பி வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**114. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**10.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட வார்டு எண். 44ல் உள்ள பெரியார் நகர் புனல் டேங் பகுதி மாநகராட்சி பூங்காவினை அப்பகுதியை சார்ந்த “இளஞ்சி சமூக நலசங்கம்” பராமரிப்பு செய்து கொள்வதாக கூறி மனு கொடுத்துள்ளார்கள். மாநகராட்சியின் நிபந்தனைகளுக்குட்பட்டு அச்சங்கத்திற்கு பூங்காவை பராமரிப்பு செய்ய ஒப்படைக்கவும், பூங்கா பராமரிப்புக்கான செலவில் மாநகராட்சியின் பங்குத்தொகை ரூ.10,000/– மட்டும் மாதம்தோறும் வழங்கவும் அனுமதிக்கலாம். தற்போதுள்ள நிலையிலேயே மின்சாரக் கட்டணத்தை மாநகராட்சியே செலுத்தவும் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1) அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ2/3889/18

**115. அனுமதிக்கப்பட்டது.**

**11.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண்.53 சர்வே வார்டு எண்.E பிளாக்-14 புல எண்.1.3 &-5-ல் அமைந்துள்ள துப்புரவு பணியாளர் குடியிருப்பு பகுதி 2.16 ஏக்கர் பரப்பளவும், வார்டு எண்.E பிளாக்-14 புல எண்.2,4-ல் அமைந்துள்ள 0.21 ஏக்கர் பரப்பளவும் மற்றும் வார்டு எண்.E பிளாக்-11 புல எண்.11 மற்றும் 12-ல் அமைந்துள்ள 1.53 ஏக்கர் பரப்பளவும் ஆக மொத்தம் 3.90 ஏக்கர் பரப்பளவு உள்ள கொண்ட துப்புரவு பணியாளர் குடியிருப்புப்பகுதி மாநகராட்சிக்கு சொந்தமானதாகும். இந்த இடத்தில் 120 மாநகராட்சி துப்புரவு தொழிலாளர்கள் குடியிருப்புகளும், குடியிருப்புகளை சுற்றி தோராயமாக 350 ஆக்கிரமிப்புதாரர்களும் சுமார் 50 வருடங்களாக வசித்து வருகின்றனர். இந்த குடியிருப்புகளின் மேல் கூரையானது ஓட்டால் அமைந்துள்ளது.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களின் 23.06.2018-ம் தேதிய கடிதத்தில் துப்புரவு தொழிலாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டிக்கொடுக்க இக்குடியிருப்பு பகுதியை, குடிசை மாற்று வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யுமாறு தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார். மேலும் நிர்வாக பொறியாளர் குடிசை மாற்று வாரியம் அவர்களின் 20.07.2018 மற்றும் 13.08.2018-ம் தேதியிட்ட கடிதங்களில் மாநகராட்சிக்கு சொந்தமான துப்புரவு பணியாளர் குடியிருப்பு பகுதியில் அங்குள்ள துப்புரவுப்பணியாளர்களுக்கும், ஆக்கிரமிப்பு தாரர்களுக்கும் பாரத பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட நில உரிமை மாற்றம் செய்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் இதற்கான அரசாணை எண்.M.S.No.25 / ந.நி (ம) கு.வழங்கு துறை நாள்.25.02.2000-ன்படி மனை (1 கிரவுண்ட் =2400 சதுரடி) ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் செலுத்த தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் இந்த திட்டத்தை செயல் படுத்தும் பொருட்டு அந்த நிலத்தில் பூர்வாங்க சர்வே பணிகள் செய்யவும், மண் பரிசோதனை செய்யவும் இந்த நிலத்திற்கு முன் நுழைவு அனுமதியும் வழங்குமாறு வேண்டியுள்ளார்.

எனவே ஈரோடு மாநகராட்சி சர்வே வார்டு எண்.E பிளாக்-14 புல எண்.1.3 &-5-ல் அமைந்துள்ள துப்புரவு பணியாளர் குடியிருப்பு பகுதி 2.16 ஏக்கர் பரப்பளவும், வார்டு எண்.E பிளாக்-14 புல எண்.2,4-ல் அமைந்துள்ள 0.21 ஏக்கர் பரப்பளவும் மற்றும் வார்டு எண்.E பிளாக்-11 புல எண்.11 மற்றும் 12-ல் அமைந்துள்ள 1.53 ஏக்கர் பரப்பளவும் ஆக மொத்தம் 3.90 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தை அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்ட, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு முன் நுழைவு அனுமதி (Enter upon permission) வழங்க மாமன்ற ஒப்புதலுடன் அரசை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம்

கோப்பு எண். 3870/18/இ1

**116.** **அனுமதிக்கப்பட்டது.**

12. ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிக்கு இம்மான்றத் தீர்மானம் எண்.758 நாள்.30.09.2008-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மேற்படி பணியை KfW நிதியுடன் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.249 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.12.2008-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை-5 அவர்களின் செயல்முறைகள் ஆணை கடிதம் ந.க.எண்.55420/08/வஅ2 நாள்.20.05.2009-ல் சிப்பம்-1, சிப்பம்-2, சிப்பம்-3, சிப்பம்-4 ஆகியவைகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, சிப்பம்-5 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையப் பணியினை விதிகளுக்குட்பட்டு DBOT(Design, Built, Operation & Transfer)-ன் படி மேற்கொள்ளும்படி அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

மேற்கண்ட பாதாள சாக்கடைத் திட்டம் பணிகளுக்கு திட்டம் செயலாக்க அலகு (PIU) அரசாணை (பத்தாண்டு) எண்.438 நாள்.30.09.2009-ல் கீழ்கண்ட பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

1. தலைமை/கண்காணிப்பாளர் பொறியாளர்(CE/SE) - 1
2. செயற்பொறியாளர் (EE) - 2
3. உதவி செயற்பொறியாளர் (AEE) - 4

| | | |
|---|---|---|
| 4. உதவிப் பொறியாளர் (AE) | - | 8 |
| 5. முதல் நிலை வரைவாளர் (Sr.Draughtsman) | - | 1 |
| 6. வரைவாளர் (D-man) | - | 1 |
| 7. தொழில்நுட்ப உதவியாளர் (TA) / (பணி ஆய்வாளர் WI) | - | 1 |
| 8. கணக்கு அலுவலர் (Acct.Offer) (கணக்காளர்) | - | 1 |
| 9. உதவியாளர் | - | 1 |
| 10.புள்ளி விபர குறிப்பாளர் (சுருக்கெழுத்தர் / தட்டச்சர்) | - | 1 |
| | | 28 |

மேற்படி அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் தற்போது தலைமை/கண்காணிப்பாளர் பொறியாளர்(CE/SE) பணியிடம் 01.03.2018 முதல் காலியாக உள்ளது. மேலும் இத்திட்டப்பணி பொலிவுறு நகரங்கள் திட்டத்தில்(Smart City) சேர்க்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற உள்ளது.

ஆகவே மேற்கண்டவாறு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் தற்போது தலைமை/கண்காணிப்பாளர் பொறியாளர்(CE/SE) பணியிடத்தினை நிரப்புவதற்கும் மேற்படி திட்டப்பணி 31.12.2020 வரை அல்லது திட்டப்பணி முடிவுறும்வரை மேற்கண்ட பணியிடங்களை நீடித்துக்கொள்ளவும், மேலும் திட்டப் பணி முடியும் வரை ஆகும் பணியாளர்களின் சம்பளம் மற்ற இதர செலவினங்களை அரசாணையில் உத்திரவின்படி மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

அனுமதி வழங்கலாம்.

(இ4/8116/2015)

**117.** அனுமதிக்கப்பட்டது.